# ஆதித்தமிழர் பேரவை - புதூர் ஒன்றியம்

சூன் 29, 2010 செவ்வாய்கிழமை தூத்துக்குடி மாவட்டம் புதூர் ஒன்றியத்தில் என். வேடப்பட்டி கிராமத்தில் ஆதித்தமிழர் பேரவையின் ஒன்றிய செயற்குழு கூட்டம் நடைபெற்றது. ஒன்றியத்தின் செயலாளர் தோழர். திரு. தமிழ்முத்து தலைமைதாங்கினார். ஒன்றிய இளைஞரணிச் செயலாளர் தோழர். திரு. உடையராஜ் வரவேற்றார். செயற்குழு கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளர்களாக ஆதித்தமிழர் பேரவையின் மாநில துணைப் பொதுச்செயலாளர் திரு. க.கண்ணன், மாவட்ட செயலாளர் தோழர். திரு. இரா.வே மனோகர், வழக்கறிஞர் அணி செயலளர் திரு. சாக்கியரசு, விளதை ஒன்றிய செயலாளர் தோழர். திரு. க. திலீபன் திருச்செந்தூர் ஒன்றிய தலைவர் தோழர். திரு. மு.தமிழரசன் மற்றும் புதூர் ஒன்றிய நகர கிளைப் பொறுப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

1. புதூர் ஒன்றிய என். வேடபட்டி கிராமத்தில் அருந்ததியர் மக்களின் கோவிலுக்கு பட்டா தரவில்லை எனில் வரும் 19.07.2010 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகை இடுவது.
2. நெல்லையில் வரும் ஆகஸ்டு 22 ம் தேதி நடைபெற உள்ள அருந்ததியர்களின் வரலாறு மீட்பு மாநாட்டிற்கு 25 வாகனங்களில் குடும்பத்துடன் அனைவரும் கலந்து கொள்வது.
3. புதூர் ஒன்றியத்தின் 25 இடங்களில் ஆதித்தமிழர் பேரவையின் நிறுவனர் திரு. இரா.அதியமான் அவர்களின் தலைமையில் கொடியேற்றி பெயர் பலகைகள் திறந்து, கிளைகள் அமைத்தல் போன்ற நிகழ்வுகளை விரைவில் நடத்தவேண்டும் என்ற தீர்மானங்களை புதூர் நகரச் செயலாளர் தோழர். மாரிச்சாமி முன்மொழிந்தார். அனைவரின் ஒப்புதலோடு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இறுதியில் நன்றியுரையை புதூர் ஒன்றிய பொருளாளர் தோழர். திரு. பால்பாண்டி கூறினார். இந்த செயற்குழு கூட்டத்திற்கான ஏற்பாட்டை புதூர் ஒன்றிய பொருப்பாளர்கள் செய்திருந்தனர்.